ஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

28 07 2025 — 7 15
திங்கட்கிழமை — காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து மக்களவையில் இன்று விவாதம் நடைபெறும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- இந்தியா - இங்கிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க பேருதவியாக இருக்கும் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.
- ரயில்வே சாதனங்கள் ஏற்றுமதியில் இந்தியா உலகின் மிகப்பெரிய நாடாக உருவெடுத்து வருகிறது என்று ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.
- ஐரோப்பிய யூனியனுடன் முக்கியமான வர்த்தக ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.
- விக்டர் ஜூனியர் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Prashansa Bonam** பட்டம் வென்றார்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து மக்களவையில் இன்று விவாதம் நடைபெறும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தலைமையில் நடைபெற்ற அலுவல் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவின்படி இந்த விவாதத்திற்காக 16 மணி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

ஆபரேஷன் சிந்தூர் குறித்து விவாதம் நடத்த வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை நாடாளுமன்ற கூட்டத்தொடரின் முதல் நாளிலிருந்தே அரசு ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் திரு. கிரண் ரிஜிஜு சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

**NISAR** செயற்கைக்கோள் இஸ்ரோவின் சர்வதேச ஒத்துழைப்பு வாய்ப்புகளை மேம்படுத்தும் என்று விண்வெளித்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாசா - இஸ்ரோ கூட்டு முயற்சியில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த செயற்கைக்கோள், உலக அளவில் ஏற்படக்கூடிய பேரிடர்கள், காலநிலை மாற்றம் குறித்த முக்கியமான தரவுகளை 12 நாட்களுக்கு ஒருமுறை வழங்கும் என்றார்.

மேம்பட்ட புவி கண்காணிப்பு நடைமுறைகளில் நம்பகமான உலகளாவிய சக்தியாக இந்தியா உருவெடுப்பதை இந்த செயற்கைக்கோள் பிரதிபலிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புவியின் மேற்பரப்பில் ஏற்படும் நுட்பமான மாற்றங்களைக் கண்காணிப்பதுடன் ஆழ்கடல் மற்றும் கரையோர கண்காணிப்பு, பயிர் சாகுபடி குறித்த நில வரைபடம், மண்ணில் ஈரப்பதத்தில் ஏற்படும் மாற்றம் போன்றவற்றை அறியவும் இந்தத் தரவுகள் பயன்படும் என்று திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<>>>>

ரயில்வே சாதனங்கள் ஏற்றுமதியில் இந்தியா உலகின் மிகப்பெரிய நாடாக உருவெடுத்து வருகிறது என்று ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

குஜராத்தின் வதோதராவில் உள்ள **Alstom** ரயில்பெட்டி தொழிற்சாலையை பார்வையிட்டபின் அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இதுவரை மூவாயிரத்து 800க்கும் அதிகமான பயணிகள் ரயில் பெட்டிகள் மற்றும் 4 ஆயிரத்துக்கும் அதிகமான சரக்கு ரயில் பெட்டிகள் ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

**Alstom** ஆலை மத்திய அரசின் ‘உற்பத்திக்கான இந்தியா மற்றும் சுயசார்பு இந்தியா’ இயக்கத்தின்கீழ் ரயில் பெட்டிகள், எஞ்சின்கள் உள்ளிட்ட சாதனங்களை தயாரித்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

<<<>>>>

இந்தியா - இங்கிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான உறுதியான மற்றும் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கை என்று மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மீன்வளம், ஜவுளி, நவரத்தினக் கற்கள் உற்பத்தி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் சிறு குறு நடுத்தர தொழில் துறையினருக்கு சர்வதேச சந்தையில் புதிய வாய்ப்புகளை உருவாக்குவதாக இந்த ஒப்பந்தம் இருக்கும் என்றும் கூறினார்.

இந்திய தயாரிப்பாளர்கள் சர்வதேச சந்தையை சுதந்திரமாகவும், எளிதாகவும் அணுகுவதற்கான வாய்ப்புகளை வழங்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாகவும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<>>>>

சோழ மன்னர்களின் பொற்கால ஆட்சியை பிரதமர் எப்போதும் பெருமைப்படுத்தி வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், சோழர் ஆட்சியின் பெருமையான செங்கோலை நாடாளுமன்றத்தில் நிறுவி தமிழர்களின் கலாச்சாரப் பழமையை நிலைநாட்டியவர் பிரதமர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தமது ஒவ்வொரு புதிய நடைமுறைகள் மூலமாகவும் உலக அரங்கில் தமிழ் மொழி மற்றும் கலாச்சாரப் பெருமையை பிரதமர் வெளிப்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

கடந்த 5 ஆண்டுகளில் நாட்டின் நேரடி வரி வசூல் இரட்டிப்பாகியுள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

டிஜிட்டல் தொழில்நுட்ப பயன்பாடு உட்பட அரசு மேற்கொண்ட பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் பொருளாதார வளர்ச்சி காரணமாக வருமான வரி வசூல் 36 சதவீதம் அதிகரித்துள்ளதாக நிதியமைச்சக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 2020-21ஆம் ஆண்டில் 6 கோடியே 72 லட்சம் பேர் வருமான வரிக் கணக்கு தாக்கல் செய்த நிலையில், 2024-25ஆம் ஆண்டில் இது 9 கோடியே 19 லட்சமாக அதிகரித்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

நாட்டின் மொத்த நேரடி வரி வருவாய் கடந்த நிதியாண்டில் 27 லட்சத்து 2 ஆயிரம் கோடியா அதிகரித்திருப்பது இந்திய பொருளாதாரத்தின் வலிமை மற்றும் வரி செலுத்துவோருக்கு உகந்த நடவடிக்கைகளை பிரதிபலிப்பதாக உள்ளது என்றும் நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பீஹாரில் முதற்கட்ட சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மொத்த வாக்காளர்களில் 92 சதவீதம் பேர் இருப்பிட ஆதாரத்திற்கான சான்றிதழ்களை சமர்ப்பித்துள்ளதாகவும் அந்த ஆணையம் கூறியுள்ளது.

மொத்தம் 65 லட்சம் வாக்காளர்கள் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருப்பதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 22 லட்சம் வாக்காளர்கள் இறந்துவிட்டதாகவும், 36 லட்சம் பேர் நிரந்தரமாக இடம்பெயர்ந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருத்தம் செய்யப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட பின், செப்டம்பர் ஒன்றாம் தேதிக்குள் சேர்த்தல், நீக்கல் உள்ளிட்ட திருத்தங்களை மேற்கொள்ள வாய்ப்பளிக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தின் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் மலைப் பகுதியில் சௌசௌ காய் விளைச்சல் குறைந்துள்ளால் விலை அதிகரித்துள்ளது.

மலைக் காய்கறிகளுக்கு நிலையான விலை நிர்ணயம் செய்வதன் மூலம் தங்களது வருவாயை அதிகரிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஐரோப்பிய யூனியனுடன் முக்கியமான வர்த்தக ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

ஸ்காட்லாந்தின் **Turnberry** நகரில் ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் திருமதி **Ursula Von Der Leyen**-ஐ சந்தித்த பின் இதனைத் தெரிவித்த அவர், இந்த ஒப்பந்தம் காரணமாக ஐரோப்பிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் ஒரே சீராக 15 சதவீத வரி விதிக்க வகை செய்யப்பட்டுள்ளதாகக் கூறினார்.

இந்த ஒப்பந்தம் அமெரிக்கா இதுவரை மேற்கொண்ட ஒப்பந்தங்களில் மிகப்பெரிய வர்த்தக ஒப்பந்தம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே கூடுதல் வரி விதிப்பை தவிர்ப்பதற்காக உலக நாடுகளுக்கு அமெரிக்கா விதித்த ஆகஸ்ட் ஒன்றாம் தேதி காலக்கெடு நீட்டிக்கப்பட மாட்டாது என்று அந்நாட்டு வர்த்தகத்துறை அமைச்சர் திரு. **Howard Lutnick** தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

விக்டர் ஜூனியர் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Prashansa Bonam** பட்டம் வென்றார்.

துருக்கியில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 19-21, 21-19, 21-16 என்ற செட் கணக்கில் துருக்கியின் **Aleyna**-வை வென்றார்.

<<<<>>>>

ஜார்ஜியாவில் நடைபெற்று வரும் உலகக்கோப்பை மகளிர் செஸ் போட்டியின் இறுதிச் சுற்றில் இந்தியாவின் கொனேரு ஹம்பி – திவ்யா தேஷ்முக் இடையிலான இரண்டாவது ஆட்டமும் டிரா ஆனது.

டை-பிரேக்கர் சுற்று இன்று நடைபெற உள்ளது.

<<<<>>>>

மான்செஸ்டரில் நடைபெற்ற இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 4வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி டிரா ஆனது.

<<<<>>>>

17 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டி இன்று ஏதென்சில் தொடங்குகிறது.

<<<<>>>>